**<u>சார்பு நீதிமன்றம், துறையூர்.</u>**

**முன்னிலை .. திரு. C.விஜய் கார்த்திக், M.A,M.L.,**

**சார்பு நீதிபதி,துறையூர்.**

**2025-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 04-ம் நாள் திங்கள்கிழமை**

**<u>அசல் வழக்கு எண்.111/2023</u>**

**<u>CNRNo.TNTP150003822023</u>**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சி புத்தனாம்பட்டி கிளை, (Erstwhile Syndicate Bank amalgamated with Canara Bank as per the GO No.GSR 155(E), dated 04.03.2020), having its Head Office at No.112, J.C.Road, Bengaluru-560002. One of its branches namely 1/115 Nehru Street (College Road) என்ற விலாசத்தில் இயங்கி வரும் கனரா வங்கியின் சார்பாக அங்கீகரிக்கப்பட்ட அதன் கிளை மேலாளர். ...வாதி.

/எதிர்/

1. திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டம், கோட்டாத்துார், நெ.6/211 காந்திநகர் காலனி என்ற முகவரியில் வசிக்கும் ஜெயபிரகாசம் அவர்களின் மகள் சுமார் 28 வயதுள்ள வினோதினி.

2. திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டம், கோட்டாத்துார், நெ.6/211 காந்திநகர் காலனி என்ற முகவரியில் வசிக்கும் பட்டத்தான் அவர்களின் குமாரர் சுமார் 61 வயதுள்ள ஜெயபிரகாசம். ... பிரதிவாதிகள்.

வாதி வங்கியில் இந்த பிரதிவாதிகள் பெற்றுக்கொண்ட அசல் தொகை ரூ.1,60,000/-க்கு தற்போதைய வழக்குரை தொகை ரூ.3,22,699.00/-ம், அதற்கு 11.05% வட்டியும், செலவுத்தொகையும் சேர்த்து நீதிமன்றம் குறிப்பிடும் காலத்திற்குள் செலுத்தவேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்க வேண்டியும், செலவுத்தொகை கோரியும், உ.வி.மு.ச கட்டளை 7 விதி 1-ன் கீழ் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு 22.08.2023-ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டு 23.08.2023 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. தாவா மதிப்பு ரூ.3,22,699/- அதற்கு நீதிமன்ற கட்டணச்சட்டம் 14/55 பிரிவு 22 -ன் கீழ் செலுத்தப்பட்ட நீதிமன்ற கட்டணம் ரூ.9,681/- ஆகும்.

**<u>வழக்குமூலம் ..</u>** 21.12.2012, 30.01.2013, 31.10.2013, 13.04.2021 ஆகிய தேதிகளில் திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம், புத்தனாம்பட்டிகிளையில் ஏற்பட்டுள்ளது.

இந்த வழக்கானது இறுதியாக 25.07.2025-ம் தேதி விசாரணைக்கு வந்தபோது வாதிக்காக வழக்கறிஞர் திரு.V.சரவணன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகளை அழைத்தும் ஆஜராகாததால் தோன்றா தரப்பினராக்கப்பட்டும், 2-ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.N.உத்திராபதி அவர்கள் ஆஜராகி பதிலுரை தாக்கல் செய்யாததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், வாதி தரப்பில் நிகழ்த்திய வாதங்களை கேட்டும், இதுநாள்வரை இம்மன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்..

## தீர்ப்பாணை

1. வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

2. வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் வழக்குரை தொகை ரூ.3,22,699/-ம், அசல் தொகை ரூ.1,60,000/-க்கு வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதி வரை 9% வட்டியும், தீர்ப்பாணை தேதியிலிருந்து தொகை வசூலாகும் தேதி வரை 6% பின்வட்டியும் செலுத்த வேண்டுமென்று இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

3.வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் வழக்கு செலவுத்தொகையாக ரூ.12,746/-ஐ செலுத்த வேண்டுமென்று இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

## செலவுத்தொகை பட்டியல்

| வ.எண். | விவரம் | வாதி தரப்பு | | பிரதிவாதி தரப்பு | |
|---|---|---|---|---|---|
| 1. | பிராதுக்கு நீதிமன்ற கட்டணம் | 9,681 | .00 | -- | -- |
| 2. | வக்காலத்து | 10 | .00 | -- | -- |
| 3. | கட்டளை சேர்ப்பிக்க ஸ்டாம்ப் | 17 | .00 | -- | -- |
| 4. | கட்டளை தயாரிக்க | 50 | .00 | -- | -- |
| 5. | இடையில் கொடுக்கப்படும் மனுக்களின் செலவு | 00 | .00 | | |
| 6. | வழக்கறிஞர் கட்டணம் | 2,888 | .00 | -- | -- |
| 7. | வழக்குரை தயாரிக்க | 100 | .00 | -- | -- |
| **மொத்தம்** | | 12,746 | .00 | -- | -- |

2025-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 04-ம் நாள் இந்நீதிமன்ற முத்திரையும் கையொப்பமிட்டு கொடுக்கப்பட்டது.

(ஒம்)/-C.விஜய் கார்த்திக்,
சார்பு நீதிபதி,
துறையூர்.